இந்தவாரம் உலக அரங்கில் மாயாஜாலம் போன்ற அமைதி நிலவும் விடுதலைவிருப்பும் சில நாடுகளில் விடுதலை தோன்றக் கூடும். முன்பின் முரணான அரசியல் தந்திரப்பேச்சுவார்த்தைகளைக் கேட்கலாம். மக்கள் மத்தியிலும் இந்த நிலை தோன்றும். நாட்டுவளத்தைக் கூற்ற வழியுண்டு. பெருங் கைத்தொழிலதிபர்கள் குறைவாகவேயிருக்கும். ஞாயிற நிலத்தவிர்த்த ஏனைநாட்கள் பொதுச்சம்பவங்களைச் செய்யக்கூடிய நாட்களாகும்.

எண்: 1

இவர்களுக்கு இந்தவாரம் காரியங்களில் வீண் தாமதமும் கஷ்டங்களுமுண்டு. தொழிற்துறையில் முன்னேற்றங்கள் நடைபெற்ற ஏது உண்டாகும். குடும்பவாழ்க்கையில் ஏதாவது மனக்குறை ஏற்படலாம். குடும்பத்தில் வாக்குவாதங்களை விலக்கிக்கொள்ளுதல் வேண்டும்; உங்கள் நடவடிக்கைகளை மற்றவர்கள் தவறாகக் கணிக்கக் கூடும். பொருள்வரவு சுமாராக இருக்கும். பிரயாணத்தின்மேல் காரியசித்தியுண்டு. ஆகால பேசனத்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். சிலருக்கும் புதுவிதமான நோய்களும் தோன்றக்கூடும். சிலரது மனம் போதைவஸ்துக்களை நாடுதலாக நாட்டங்கொள்ளும்.

எண்: 2

இவர்களுக்கு இந்தவாரம் ஒரு திட்டத்துடன் கூடிய நல்வாழ்வு அமையும். அதிர்ஷ்டகரமான வாரமென்றே கூறலாம். கல்களில் ஆர்வமும் ஏற்படும். சிலர் சொந்தமாகத் தொழில் செய்யவும் யோசிக்கலாம். பல விதமுயற்சிகளிலும் பொருள் சேரும். உறவினர்களின் உதவியுடன் செல்வாக்கு உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தெய்வ அனுகூலமுண்டு. சிலருக்கு மனக்களிப்பான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். நல்ல உத்தியோகப்பேறுகிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத சிலர் ஏற்படலாம். பிரயாணத்தால் முறியடித்த வெற்றி பெறுவார்கள்.

எண்: 3

இவர்களுக்கு இந்தவாரம் ஒருவிதத்தளர்வு மனதில் குடிகொள்ளும். தீயவழிகளிலேயே மனம் கூடுதலாகச் செல்லும் மனத்தொல்லைகள் அதிகரிக்கும். மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள் உழைப்பும், புத்திசாலித்தனமும், வெற்றியும் கிட்டியபோது நியாயமுறையிலேயே அவற்றைப் பயன்படுத்த முற்படுவீர்கள். கருப்பாக இனித்த [நண்பர்களை வேறுபடுத்தவும் கூடும். எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். சட்ட நிலையும் நிதானவேண்டிய நிலையும் ஏற்படலாம். மதுபானத்தைத் தவிர்த்து பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

எண்: 4

இவர்களுக்கு இந்தவாரம் புதுமனத்தெம்பு ஒன்று வெளிக்கிளம்பி தொழிற்துறையில் புதியவாய்ப்புக்கள் தேடப்படலாம். நீண்டநாட்களாக இருந்த கஷ்டங்கள் நீங்கக் கூடும். புதுப்புதுக் கருத்துக்களை நன்னோக்கிலே கொள்ளுவீர். எழுத்தாளர்களுக்கு ஒருபுதுயுகமே தோன்றலாம். வியாபாரிகளுக்கு முன்னேற்றமுண்டு. இசைத் தொழிலாளர்களுக்கு கடுதலாக இருக்கும். தாய்வழிமூலம் புதிய ஆதரவு கிடைக்கும். சொந்த வியாபாரங்களில் நல்ல முடிவு ஏற்படும். காதல் மற்றும் அன்புக்குரியவிஷயங்களில் அவசரப்படாமல் நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

எண்: 5

இவர்களுக்கு இந்தவாரம் உணர்ச்சிவயம் கூடுதலாக இருக்கும். சில முன்னேற்றங்களும் லாபங்களும் ஏற்பட்டபோதிலும் எதிர்பாராத வீழ்ச்சியும் ஏற்பட இடமுண்டாகலாம். பொதுத்துறையில் அதிக மனநாட்டம் ஏற்படலாம். தெய்வ அனுகூலமுண்டு. பெரியார் ஒருவரின் ஒத்தாசையும் கிடைக்கலாம். நேர்முகப் பரீட்சைபோன்ற ஆபத்தான சூழலைக் செய்யக் கூடிய அரசியல்வாதிகளுக்கு [illegible] ஆதரவு [illegible] குடும்பத்தில் [illegible] பிரயாணத்தால் [illegible] ஏற்படலாம் [illegible] மனதிலுள்ள ஒழுங்கற்ற உணர்ச்சிவசப்படாமல் இருத்தல் உத்தமம்.

எண்: 6

இவர்களுக்கு இந்தவாரம் போட்டிகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்புகளுண்டு. காதலர்களுக்கு [illegible] கண்டாய் [illegible] [illegible] [illegible]

சுவாமி விபுலானந்தர் பணியும் வாழ்க்கையும்

(முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டுவிழா இன்று மாபெரும் தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை இங்குவெளியிடப்படுகிறது.)

சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பில் காரைதீவு என்னும் கிராமத்தில் சாமித் தம்பி எல்லாவருக்கும் கணபதி மயிலாருக்கும் அருந்தவப் புதல்வராய் 26-3-1892ல் தோன்றினார். சுவாமிகளுக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் மயில் வாகனம் என்பதாகும்.

இவர்களுக்கு எழுத்தறிவித்தவர் குஞ்சித்தம்பி ஆசிரியராவார். சுவாமிகள் இளமைப் பருவத்தில் தாம் கல்வி கற்றமுறையைப் பற்றிக் கூறியிருப்பது இச்சந்ததியினருக்குப் பிரயோசனமாயிருக்குமாதலால் அதை கீழே கொடுக்கிறேன்.

"பள்ளிக்கூடப் பாடங்களுக்கு காலைப் பொழுதும், பாரதவாசகம் வாசிப்பதற்கு மாலைப் பொழுதுமாக இளவயதிற் பழகிய பழக்கப்படியே நான் பின்னாளிலும் தமிழையும் ஆங்கிலத்தையும் ஒருங்கு கற்றுவந்தேன். இறுதியிலே பாரதவாசகம் நான்கு புத்தகங்களை முதலிலிருந்து இறுதிவரையும் இரண்டுமுறை வாசித்தேன்."

சுவாமிகள் ஆங்கிலக் கல்வியை முதலில் கல்முனை தெரிந்த பாடசாலையிலும், பின்னர் மட்டக்களப்பிலுள்ள அரச மகாவித்தியாலயத்திலும் பெற்றுக்கொண்டார்;

சுவாமிகள் கொழும்பில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் எழு ஆண்டு வருடங்களுக் அவர் வாழ்க்கையில் முக்கியகாலமாகும். இக் காலத்தில் மறு பாடங்களோடு ஆங்கிலத்தையும், தமிழையும் செவ்வனே கற்பதிற் கவனஞ்செலுத்தினார். கல்லூரி நூல்நிலையத்திலிருந்த ஆங்கில நூல்களை ஆர்வத்தோடு வாசித்து வந்தனர்;

அதோடு அக்கு தமிழ் விரிவுரையாளராகவிருந்த தெல்லோலை சுந்தரபரமலிங்கனிடம் சிந்தாமணி முதலிய நூல்களைப் பாடங்கேட்டார். இப்படிப் பாடங்கேட்டதினாற் போலும் சுவாமிகளுக்குச் சிந்தாமணியில் நல்ல ஆட்சி இருந்தது. நூற்றுக்கணக்கான சிந்தாமணிச் செய்யுள்கள் மனப்பாடமாயிருந்தன.

பயிற்றப்பட்டபின் சிறிது காலம் மட்டக்களப்பில் ஆசிரியராய்க் கடமையாற்றியபின் விஞ்ஞானத்தில் டிப்புலோமா பெறுவதற்காக மறுபடியும் கொழும்புக்குச் சென்றார் இவருடன் இவ்வகுப்பில் படித்தவர்களில் திரு. அருணாந்தி அவர்களும் பின்னர் பிரபல நியாயதுரந்தராக விளங்கிய ஞானப்பிரகாசக் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கொழும்பிலிருக்கும் போது விஞ்ஞானத்தோடு தமிழையும் திறம்படக் கற்றுவந்தார். இதோடு விவேகானந்தசபையாரும் தொடர்புவைத்திருந்தார்: டிப்புலோமாப்பரீட்சையில் இந்தியெய்தியதை அடுத்து மதுரைத் தமிழ்ச் சங்க நடாத்திய பண்டித பரீட்சையிலும் தமிழையும் ஆங்கிலத்தையும் ஒருங்கு கற்றுவந்தேன். இறுதியிலே பாரதவாசகம் நான்கு புத்தகங்களை முதலிலிருந்து இறுதிவரையும் இரண்டுமுறை வாசித்தேன்."

சுவாமிகள் ஆங்கிலக் கல்வியை முதலில் கல்முனை தெரிந்த பாடசாலையிலும், பின்னர் மட்டக்களப்பிலுள்ள அரச மகாவித்தியாலயத்திலும் பெற்றுக்கொண்டார்;

சுவாமிகள் கொழும்பில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் எழு ஆண்டு வருடங்களுக் அவர் வாழ்க்கையில் முக்கியகாலமாகும். இக் காலத்தில் மறு பாடங்களோடு ஆங்கிலத்தையும், தமிழையும் செவ்வனே கற்பதிற் கவனஞ்செலுத்தினார், கல்லூரி நூல்நிலையத்திலிருந்த ஆங்கில நூல்களை ஆர்வத்தோடு வாசித்து வந்தனர்;

லமாகத் தநவுவாழ்க்கையிலிருந்த நாட்டம் துப்பேர்முத்திவிரதிலையை அடைந்தது இதனால் அவர் கல்வாண்டிக் அதிபர் பதவியைத் துறந்து இராமகிருஷ்ணசங்கத்தில் துற

வியாகச்சேர்ந்தார். அக்காலத்தில் மயிலாப்பூர் மடத்துக்குத் தலைவராயிருந்த சுவாமி சர்வானந்தர் இவர்களின் வளர்ச்சிக்குப் பேருதவியாயிருந்தார்.

மயிலாப்பூரில், மடத்திலிருந்த காலத்தில் இராமகிருஷ்ணசங்கம் நடாத்திய 'இராமகிருஷ்ணவிஜயம்' என்னும் தமிழ்ச் சஞ்சிகைக்கும், வேதாந்த கேசரி என்னும் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராயிருந்து பல அரிய கட்டுரைகள் எழுதினார். "இராமகிருஷ்ண விஜயத்துக்கு" எழுதிய கட்டுரைகள் பல இப்பொழுது திரு. அருள் செல்வராயன் வெளியிட்ட தொகுப்புநூல்களில் வெளிவந்துள்ளன.

இவர் மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் நிகழ்த்

ச. அம்பிகைபாகன் எ. ஏ.

வகித்துப் பணியாற்றிவந்தார்கள். 1927ல் ஆண்டில் யாழ்ப்பாண வாலிபர் சங்கத்துக்குத் தலைவராகவிருந்து காந்தியடிகளை வரவேற்குக் பேற்றைப் பெற்றார்

1931ல் ஆண்டில் அண்ணாமலைச் சர்வகலாசாலை நிறுவப்பட்டதும் ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் சுவாமிகளைத் தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்குக்படி வேண்டினார். சுவாமிகளும் அதற்கிசைந்து ஈராண்டுகள் தமிழ்ப் பேராசிரியர் பதவியை வகித்தனர் சுவாமிகளின் பெளதிகநூலறிவும், கணிதநூற்பயிற்சியும், தமிழ் நூல்களிலிருந்த ஆட்சியும், வாழ் நூலாராய்ச்சியும் பேருதவியாயிருந்தன சுவாமிகளின் இத்தகுதிகளை உற்றுநோக்கும் போது யாழ் நூலாராய்ச்சிக்கென்றே தோன்றினார் என எண்ணத்தக்கதாகவிருக்கிறது.

இலங்கைச் சர்வகலாசாலையில் தமிழ்த்துறைக்கு ஒரு பேராசிரியர் தேவைப்பட்டது. இப்பதவியை சுவாமிகளை ஏற்குக்படி பல அன்பர்கள் வற்புறுத்தினதின்பேரில் சுவாமிகளுக் அதை ஏற்றுக்கொண்டார்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துப் பணியாற்றிவருகையில் இலங்கைத் தமிழர்கள் செய்த தவக்குறைவால் சுவாமிகளுக்கு கடுக் சுரம் ஏற்பட்டது. சிறிதுகாலத்தில் நோய் குணப்பட்டபோதிலும் சுவாமிகளின் உடல் தளர்ச்சியடைந்துவிட்டது. உடல் தளர்ச்சியடைந்தபோதிலும் தமது மனத்திடத்தினால் பேராசிரியர் பதவியைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

இக் காலத்தில் காரைதீவுத் தமிழ்ச் சங்கம் சுவாமிகளின் வாழ்நூல் வெளியிடும் பொறுப்பை ஏற்றது. 1947ல் ஆண்டு ஜூன் மாதம் 20ம், 21ந் தேதி

இருக்கு. நான் எல்லாரும் புரிந்துகொண்டிருக்கிறேன். உங்களுடைய பாதை வழி தப்பிப் போயிருக்கு. இதில் நீங்கள் மட்டுமல்ல, இப்படி எத்தனையோ பேர்; நான் சொன்னமாதிரி நடுச்சந்தியில் ஏற்படப்போகிற குற்ற உணர்ச்சி தாங்காமலோ, எங்கே அதை நினைத்து நோகவைக்கிறது பயந்தோ, உங்களைத் தற்காப்புப்படுத்தி அதில் வாற வேண்டியதை பெரிசாக்கி நினைக்க உங்களுடைய மனசுக் இப்படித் திசை மாறிப்போயிருக்கும். இதுக்காக இப்ப வருத்தப்படுது என்ன பயன், எழுந்துவிடுங்கோ" கண்ணைத் துடைச்சுக்கொண்டு கேட்ட 'அப்பா வாற நேரமாய்விட்டது. முகம்பளிச்செண்டு இருக்கவேண்டாமோ? லண்டனிலையிருந்து இப்படி ஓர் அடி வந்த நிக்குதேயெண்டு கிரிப்பார், கிலுவை சுமக்கிற மாதிரியா எல்லோருக்கும் வருமே. இது ஒரு குற்றமே? எங்கை பார்ப்பன்! கிரியுங்கோ..."

அவள் கிரித்துவிட்டாள்.

(பாவுக் கறப்பன்)

சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதருக்கு. ஆனால் என்ன செய்ய? நான் ஆங்கே திருப்பி போவதுதான் நிச்சயமாயிருக்கு ஏனென்றால்..."

அதற்கு மேலே சொல்ல முடியாமல் அவள் வெட்கப்பட்டவாறு முகத்தில் கிரிப்பு மறைந்துபோய் பேசுவதை நிறுத்திவிட்டு மௌனத்தில் பெருமூச்செறிந்துகொண்டிருக்கிறாள்.

அவனுக்கு அவளுடைய விவகாரம் புரிந்துவிட்டிருக்கிற மாதிரி, அவர்கள் அப்படித்தான் வழிதப்பிச் செல்கிறவர்கள் என்று மனத்தெளிந்தவனாய் அவனுக்குத் தேநீர் போட்டுக்கொண்டு வருவதாகக் உள்ளேபோகத் திருப்பினான்.

'இருக்கோணுமா! பேச்சு வாக்கில் தேநீர் கூடத் தர மறந்திட்டேன்..."

"பரவாயில்லை- என் கதை அரைவாசியில் நின்றுபோச்சு, முழுவதுக் கேக்காமல் போகிறீர்களே!

'கேட்க இனி என்ன

ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று

வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாலையோ,
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கலலடி உத்தமனார் வேண்டுவது.

காய்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ
மாய்பிறவாவாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காய்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல,
கூப்பியகைக் காந்தளடி கோமானார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலிலாப் பூவுமல்ல
கற்பகமோ.
வாட்ட முறுதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலிலாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

— சுவாமி விபுலானந்தர்.

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கண்ணுதியார் ரோட்,
போன்: 7199,

வாழ்ப்பாணம்;
தந்தி: வைரம்;

வீர சங்கிலியன்

(மன்னன் சிங்க பரராஜ சேகரனின் பட்டத்துத் தேவி இராசலட்சுமியம் மாளின் இளைய குமாரன் பண்டாரமும்கொலைசெய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசாகவும், யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவுமிருந்த இரண்டாம் மகிலி வல்லியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜ சேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமல் மௌனமாக விருந்தானென்பதையும், காலியான சிம்மாசனத்தில் சிங்க பரராஜசேகரன் மீண்டும் தானே ஏறி அமர்ந்து ஆட்சிபுரிவதற்குத் தன் வலம் பொருந்திய சிம்மாசனத்தை மீண்டும் ஆக்கிப்பட்டமேற்கும் எண்ணம் அவனது மனதெங்கணத்தில் நிமித்தமே சிங்க பரராஜ சேகரன் அவ்வாறு நடந்துகொண்டானென்பதையும் சென்ற வாரக் கட்டுரையில் படித்தீர்கள்.)

[5]

பட்டத்துத்தேவியின் மூத்த குமாரன் சிங்கவாகு கொலை செய்யப்பட்ட போது அக் கொலை சம்பந்தமாக சங்கிலி மீது வதந்தி பரவியிருந்தாலும் அதனை நம்பாத சிங்க பரராஜ சேகரன் இறுதியில் பரநிருபசிங்கனை இக் கொலைகளுக்குச் சந்தேகித்ததாலேயே அவனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமல் மௌனமாக விருந்தானென்பதையும், காலியான சிம்மாசனத்தில் சிங்க பரராஜசேகரன் மீண்டும் தானே ஏறி அமர்ந்து ஆட்சிபுரிவதற்குத் தன் வலம் பொருந்திய சிம்மாசனத்தை மீண்டும் ஆக்கிப்பட்டமேற்கும் எண்ணம் அவனது மனதெங்கணத்தில் நிமித்தமே சிங்க பரராஜ சேகரன் அவ்வாறு நடந்துகொண்டானென்பதையும் சென்ற வாரக் கட்டுரையில் படித்தீர்கள்.)

மன்னனின் மதிநுட்பம்

ஒருபிள்ளை செய்த குற்றத்திற்கு மற்றப்பிள்ளைகளை எந்தத் தந்தையும் பிரித்தவழி விருப்புவானா? மற்றப் பிள்ளைகள் தன்னிடமிருந்து தாயினால் பிரித்துவைக்கப்படுவதை எந்தத்தந்தையும் தாங்கிக் கொள்வானா?

[9ம் பக்கம் பார்க்க]

ம. க. அ. அந்தனிசில்

(ஆசிரியர்,தீப்பொறி)

மீது வதந்தி பரவியிருந்த போதிலும் அதை நம்பாத சிங்க பரராஜசேகரனுக்கு பரநிருபசிங்கன் மீது சந்தேகம் இருக்கவில்லை.

வழக்கமான எதிரிகளின் சதிவேலையின் நிமித்தமே சிங்கவாகு கொலைசெய்யப்பட்டிருக்கிறானென்றதால் மன்னன் சிங்க பரராஜசேகரன் நினைத்திருக்கிறான்.

வேறெப்படி அவனால் நினைக்க முடியும்?

தன் பிள்ளைகளில் ஒவ்வொரு மற்றப்பிள்ளை கொல்லுமென்பதை அவனால் கற்பனையிலும் நினைத்துப்பார்க்க முடியாதே.

அதனாலேயே சிங்கவாகுவின் கொலை சம்பந்தமாகத் தன் இரண்டாவது மனைவி வல்லியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் மீதோ, தன் மூன்றாம் மனைவி வைப்பாட்டி மக்கத்தம்மாளின் ஒரே புதல்வன் சங்கிலி மீதோ அவனுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

ஆனால் சிங்கவாகுவின் தம்பி பண்டாரமும் கொலைசெய்யப்பட்ட பின்னர்தான் அடுத்த அடுத்து இளவரசர் இருவரும் கொல்லப்பட்டதான காரணத்தையும் அக்கொலைகளின் சூத்திரதாரி யாரென்பதையும் ஊகித்து பரநிருபசிங்கன் மீது வைத்திருந்த சந்தேகம் எப்படி துடைத்தெறியப்பட்டு இந்த நிலையில் அவன் தன் இரண்டாம் மனைவி வல்லியம்மையிடம் போய் "இரு கொலைகளுக்கும் உன் மூத்த மகன் பரநிருபசிங்கனையே சந்தேகிக்கிறேன்" என்று சொல்வானானால் என்ன நடக்கும்?

அப்படியிருக்கவும், அதையும் மீறி பண்டாரம் கொலைசெய்யப்படுகிறானென்றால் உடனிருந்து கொல்லும் அளவு உடன் பிறந்து கொல்லும் பிறவி அரண்மனைக்குள் நடமாடுகிறதென்பதை சிங்க பரராஜசேகரன் ஊகித்து உணர்ந்துகொள்கிறான்.

சிங்கவாகு கொலைசெய்யப்பட்ட பின்னர் பண்டாரத்துக்கு பட்டஞ்சூட்டிய சிங்க பரராஜசேகரன் வாத்திரா தரிசனம் செய்ய சங்கிலியையும் தன்னுடன் கும்பலோடத்திற்கு அழைத்துச் சென்றது சங்கிலி மீது அவனுக்குள் சந்தேகிக்கிறான் என்பதை வெளிக்காட்டுகிறது.

பண்டாரம் கொலைசெய்யப்பட்டபின்னர் சிம்மாசனத்துக்கடுத்த வாரிசாகவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவுமிருந்த பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமல் மௌனமாகவிருந்தது பரநிருபசிங்கன் மீது அவனுக்குச் சந்தேகமிருப்பதை வெளிக்காட்டுகிறது.

அரசன் வழங்கிய தண்டனை

சிம்மாசனம் ஏறவேண்டுமென்ற பேராசையில் இளவரசர் இருவரினதும் கொலைகளை பரநிருபசிங்கனே செய்திருந்தான். அவன் எதற்காக அக் கொலைகளைச் செய்தானோ அவ்வெண்ணங்களைத் தன் நீண்ட மௌனத்தின் மூலம் நிறைவேறுமல் செய்துவிட்டான் சிங்க பரராஜசேகரன்.

பட்டத்து இளவரசர்கள் இருவரும் கொலைசெய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனுக்கு பட்டஞ்சூட்டி வைக்காததே சிங்க பரராஜசேகரன் அவனுக்குத்தந்த தண்டனையாகும்.

வல்லியம்மை மன்னனை எதிர்த்து சண்டமாருதமெனக் கிளம்பியிருப்பாள். சிங்கலுக்குள் சிங்கங்கள் தோன்றும். பாநிருபசிங்கனின் இளைய சகோதரர்கள் மூவரும்கூட "அப்பா அண்ணனைக் கொலை செய்தார்" என்று கூறி துக்கிப்பர். தந்தைமீது வேண்டாத வெறுப்பும் கொள்வர். வல்லியம்மையும் இளைய பிள்ளைகள் மூவரின் மனதிலும் தந்தைக்கெதிராக நஞ்சைத் தூவுவாள். தந்தையை விரோதிக்கவும் சொல்லுவாள். இதனால் அரச குடும்பம் அல்லோல கல்லோலப்படும். வெளியே பகைவர் நகைப்பர்.

இவையனைத்தையும் சகித்துக் கொள்ள முடியாதவனாகவே மன்னன் இருந்தான்.

அப்பப்பா அவனுக்குத்தான் எத்தனை தன்மானம்?

தனது தந்தை வைகுரிய சிங்க ஆரியன் காலத்தில் சிங்களப் படையெடுப்பால் 17 வருடங்கள் யாழ்ப்பாண அரசு பறிபோயிருந்ததையும் இரு கொலைஞர்க்கும் காரணமாகவே தன் குடும்பத்துக்குள்ளேயே இருந்ததையும் எண்ணிக்கொண்டிருக்கிறான் சிங்க பரராஜசேகரனின் மனம் வேதனையால் வெதும்பித் துடித்திருக்குமல்லவா?

அதுமட்டுமா? மூத்தமனைவியின் இரு பிள்ளைகளையும் படுகொலைக்குப் பறிகொடுத்தவன். இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் மீது கொண்ட சந்தேகமாக தனக்குண்டான சந்தேகத்தை வல்லியம்மையிடம் தெரிவித்தால் அவள் மற்ற இளைய பிள்ளைகள் மூவரிடமும் தந்தைமீது விரோத மனப்பான்மையை மூட்டி அவனிடமிருந்து அவர்களைப் பிரித்துவைத்து விடுவாளே? இதனால் அம்மூன்றுபிள்ளைகளையும் சிங்க பரராஜசேகரன் உயிருடன் பிரிந்துவாழ நேரிடுமே.

மன்னனின் மதிநுட்பம் செய்த குற்றத்திற்கு மற்றப்பிள்ளைகளை எந்தத் தந்தையும் பிரித்தவழி விருப்புவானா? மற்றப் பிள்ளைகள் தன்னிடமிருந்து தாயினால் பிரித்துவைக்கப்படுவதை எந்தத்தந்தையும் தாங்கிக் கொள்வானா?

2ND POPULAR WEEK

REGAL (Jaffna) Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m.

THIS IS LIKE NOROBBERY YOU'VE EVER IM GINED
CHARLES GRODIN CANDICE BERGEN

11 HARLOW HOUSE
(Color
More Suitable For Adults)

7 வது ஜனத்திரள் வாரம்

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30 2-30 6 9-45

சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த

தீபம்

(வெள்ளிவிழாச் சித்திரம்)

(வர்ணக்கலர்)

7-வது ஜனகதிரள் வாரம்

மனோஹரா தினசரி 4 மணிக்கு

சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கனிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி நடித்த

முக்தா பிலிம்சாரின்

அந்தமான் காதலி

(வண்ணப்படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 6 மணிக்கு சனி-ஞாயிறு 4 மணிக்கு

எம். ஜி. ஆர். - லதா

நினைத்ததை முடிப்பவன்

(புதிய பிரதி) வசூல்

போன்: 7693 தினசரி 6 மணிக்கு

லிடோ (யாழ். நகர்)

அபிமான்

(வெற்றி)

வின்ஸர் தினசரி 10-30, பி.ப.2-30 6-30, 9-30

யாழ்ப்பாணம்

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

என் கடமை

(புதிய பிரதி)

RANEE CINEMA- Jaffna

Daily 5 Shows at 10.30 a m 2-15, 4-45, 7-15 & 9-45 p m

THE EXORCIST

COLOR — DO NOT MISS !

"த எக்ஸோர்சிஸ்ற்"

பிசாசினால் பீடிக்கப்பட்ட ஒரு சிறுமியின் அவல நிலையை சித்தரிக்கும் அதிபயங்கரச் சித்திரம்

(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)

ராஜா (யாழ்நகர்) தினசரி 4 மணிக்கு

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - அசோகன் நடித்த

தாய்க்குத் தலைமகன் (புதிய பிரதி)

சாந்தி யாழ்நகர். போன்: 7642. 5வது ஜனத்திரள் வாரம்!

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.

- ஜெய்சங்கர்
- ஸ்ரீ தேவி
- ஸ்ரீ காந்த்
- அசோகன்
- எம். ஆர். ராதா
- மனோரமா
- சகுளிராஜன்

பாக்ஸிடிரைவர்

சாதனையை மாடங்கள்! சகலவர் நடனங்கள்! கலையுலகும் சாதனை காட்சிகள்! மற்றும் பலவகைச் சுவைடன் நிறைந்த மனோகரமான ஓவியம்.

வைத்திய சாலையை விஸ்தரிக்க கோரிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் அரசினர் வைத்தியசாலையை விஸ்தரித்து நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் வசதிகள் செய்யுமாறு இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர், மாவட்ட அமைச்சர் உட்பட மற்றும் ஒன்பது அதிகாரிகளை கடிதமூலம் கேட்டுள்ளனர்.

சமயதீட்சை

(சுழிபுரம்)

வழக்கம்போல சனாதன பஜனை சபையினர் கார்த்திகை இரண்டாவது திங்கள் அன்று சமய தீட்சை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளனர். அரணவாகையச் சேர்ந்த திரு. திருஞானசம்பந்தக் குருக்கள் தீட்சையை நிறைவேற்ற வைப்பார்.

பொலிசாருக்கு தமிழ்வகுப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிசாருக்கான தமிழ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் பொலிஸ் அதிபர், திரு கிட்ஸ்லி விக்கிரமசூரியவின் முயற்சியினால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் தெரியாத பொலிசாருக்கு தமிழ்மொழிப் வகுப்பு ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்படுகிறது. காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு நிமலராஜா இதற்குப் பொறுப்பாக இருந்து வகுப்பை நடத்துகிறார். (மு)

வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

1500 தொன் வெங்காயம் இம்மாதம் 20ம் திகதி கம்பளி கொழும்பை வந்தடையுமென அரசாங்க வர்த்தகக் செலவு குழுவைச் சேர்ந்தவர் தெரிவித்தார்.

இச் சிவன்வெங்காயம் வந்து சேர்ந்ததும், கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ள விலை உடனடியாகக் குறையுமென்று கருதுகிறார். (வெ)

வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி: 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30

ஜெமினி நடித்த

தேன்மழை

நாகம்ஸ் (கல்லூரி) தினசரி 6-30, 9-30. சனி, ஞாயிறு 2-30

அலைகள்

RIO Jaffna Phone: 7601

Daily 4 Shows

SWEENEY 2

(Adults Only)

வீர சங்கிலியன்...

(4- பக்கத் தொடர்ச்சி)

இதனால் கடந்தகால நிகழ்ச்சிகளையும் தன் குடும்பத்தினரின் மனோபாவங்களையும் எண்ணிப்பார்த்த மன்னன் சிங்கபரராஜசேகரன், பரநிருபசிங்கன் மீது தான் கொண்டிருந்த சந்தேகங்களை வண்ணமயிடம் வெளிக்காட்டாமல் இருந்ததுடன் இதற்கு மேலாக மாமனாரான சிங்கபரராஜசேகரனே என்று முடிவெடுத்துக் கொண்டான்.

இதுவே மன்னனின் மதிநுட்ப முடிவாகும்.

மதிநுட்பமான தன் மௌனத்தின் மூலம் பலவற்றை சாதிக்க முயலுமேற்றே சிங்கபரராஜசேகரன் கருதியிருக்கிறான்.

நம் நாட்டு அரசியலில் அரச குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் மனக்கசப்புடன் கொண்டிருந்ததுடன் அதை வெளிக்காட்டாமலே வாழ்ந்திருக்கின்றனர்.

மன்னன் சிங்கபரராஜசேகரனின் பட்டத்துத் தேவியான சோழராஜவம்சத்தைச் சேர்ந்த இராசலட்சுமியும், இரண்டாம் தேவியான பாண்டிய ராஜவம்சத்தைச் சேர்ந்த வள்ளியம்மையும் அரண்மனையில் வாழ்ந்திருந்தனர். எந்த ராஜவம்சத்தையும் சேராத தன் வம்பாட்டி மகளாகிய தன்மகளை மன்னன் அரண்மனையில் வைத்திருந்திருப்பானா என்பது கேள்விக்குரியதே.

இவளேனா அரண்மனைக்குப் புறம்போக்கான இடத்தில் ஒரு மாளிகையைக் கட்டி தன் மகளாகிய மகள் சங்கிலி கடமும் மன்னன் வாழவைத்திருக்கக்கூடும்.

அரண்மனைக்குள் எந்தப் பகுதிக்கும் சங்கிலி செல்லுவதான உரிமையுடையவளாகவே யிருந்திருப்பானாலும் அரண்மனைக்குள் நடக்கும் சில விஷயங்கள் சங்கிலிக்கு உடனுக்குடன் தெரியமுடியாத நிலையும் இருந்திருக்கும்.

இளவரசன் பண்டாரம் நந்தவனத்திற்கு வேட்டையாடச் சென்றபோது புறப்பட்டது அரண்மனையிலிருந்த, இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியான பரநிருப சிங்கனுக்குத்தான் முதலில் தெரிந்திருக்கும்.

இவற்றையெல்லாம் சிங்கபரராஜசேகரன் அலங்கார மாளிகையிலிருந்திருப்பானா?

வாழ்ப்பாண இராச்சியத்தின் அதிபதியான இளவரசன் பண்டாரமும், இரண்டாம் அதிபதியான பரநிருபசிங்கனும் இராச்சிய பரிபாலனத்தை நடத்தும்போது சங்கிலியன் வெறுமனே எப்பதவியும் வகிக்காமல் ராணி மந்தன்.

சங்கிலியன் மகனான வைப்பாட்டி மகன் என்று தான் பலரும் நோக்கியிருப்பர். இதனை மனரீதியாக அறிந்துகொண்ட சங்கிலியன் தன்னை யாருக்கும் தனிவண்ணாதனாகவே வளர்த்துக் கொண்டான். சங்கிலியனின் வீரத்தனத்தை, மூர்க்கத்தனத்தை முரட்டுத்தனம் என்றுதான் சில சரித்திர ஏடுகள் குறிப்பிட்டுள்ளன.

(இந்த விஷயத்தினதான சரித்திரக் குறிப்புகள் பிழைபடுத்தப்படும்.)

எது எப்படியிருந்த போதிலும் மன்னன் சிங்கபரராஜசேகரன் தன் வைப்பாட்டி மகன் சங்கிலியன் மீது உயிரையே வைத்திருக்கிறான் என்னும் மிகையானது அந்நாள் சிறு சங்கிலியனிடம் நல்ல குணநிலையங்கள் இருந்திருக்கின்றன.

சங்கிலியன் மேல் தான் கொண்ட பற்றையும் பாசத்தையும் மன்னன் வெளிக்காட்டாமலே இருந்திருப்பான் ஏனெனில் வைப்பாட்டி மகனாகிய சங்கிலியனிடம் அதிக பாசம் வைத்திருக்கிறானென்று இரண்டாம் மகனான வள்ளியம்மையின் குடும்பத்தினர் சிங்கபரராஜசேகரன் இலங்கா வேண்டியிருக்குமே.

மன்னனுக்குத்தான் எத்தனை சோதனை!

இளவரசன் பண்டாரம் வாளினால் வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவும், சிங்காசனத்திற்கு அடுத்த வாரிசாகவும் இருந்த பரநிருபசிங்கனுக்கும் பட்டஞ்சூட்டி வைக்காமல் சிங்கபரராஜசேகரன் மௌனமாகவே இரண்டாம் மகனான வள்ளியம்மையின் மகனான முத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்குப் புரியாத புதிராகவே இருந்திருக்கும்.

கடைத்தான் சிங்கபரராஜசேகரனும் விரும்பினான். அவர்களுக்குத் தன் மன எண்ணம் தெரியக்கூடாதென்றே விரும்பினான்.

அரசன் ஆடிய நாடகம்

தனுலுக் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காமலும், தானும் மீண்டும் சிங்கமாசனத்தில் அமராமலுமிருப்பது சங்கிலி சிங்காசனமேறவழி விடுவதற்காகவே யென்று இரண்டாம் மகனான வள்ளியம்மையும் அவள் மகன் பரநிருபசிங்கனும் மற்றவர்களும் நினைக்கக்கூடுமென்று எதிர்பார்த்த சிங்கபரராஜசேகரன் கடைசி வரை ஒரு நாடகமாடினான்.

தன்னுடைய மூத்த குமாரர் இருவரினதும் படுகொலையினால் விரக்தியுற்ற நிலையில் நடப்பது நடக்கட்டுமென்று ஒதுங்கிக்கொள்வது போல் நடித்திருக்கிறான் சிங்கபரராஜசேகரன்.

(இவைகளெல்லாம் அலங்கார மாளிகை அல்லது அலங்கார மாளிகையிலுமிருந்த சரித்திர ஆசிரியர்கள் சிலர் "சிங்கபரராஜசேகரன் சங்கிலியனுக்கு பயந்தே ஒதுங்கினான்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இச் சரித்திர ஆசிரியர்கள் எழுதிய [illegible] பார்வையாலேயே சில சரித்திரங்களும் தங்கியிருக்கப் படைக்கப்பட்டிருக்கின்றன.)

சிங்கபரராஜசேகரன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டிவைக்க முன்னராகவும், மௌனமாகவிருந்ததும், ஒதுங்கி இருக்கலாமென்பதுபோல நடித்ததும் சங்கிலியன் அரியணையேறட்டும் என்ற ஒரே நோக்கத்தினாலேயன்றி வேறல்ல.

இளவரசர்கள் சிங்கவாகு பண்டாரம் இருவரினதும் கொலைக்குப்பின் சிங்காசனத்துக்கு வாரிசாகவிருந்த தனக்கு சிங்கபரராஜசேகரன் பட்டஞ்சூட்டிவைக்க முன்னராகவும் மௌனமாகவும் ஒதுங்கியிருப்பதும் இருந்தது பரநிருபசிங்கனுக்கு மனக் குழப்பத்தையே தந்திருக்கும்.

தன்மூத்த மகன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைப்பதில் தாமதமேன் என்று சிந்தனையாய்த்திருப்பான் சிங்கபரராஜசேகரனின் இரண்டாம் மகனாகிய வள்ளியம்மை

தன் ஆசை நிராசையாகி விடுமோ என்றெண்ணிய பரநிருபசிங்கன் வேறேதும் சதிகளிலும் ஈடுபடக்கூடிய மனப்பான்மை புடையவனாகவே சங்கிலியன் உஷாராகிறான்.

தன் தந்தை சிங்கபரராஜசேகரனின் மௌனத்தின் அர்த்தத்தை புரிந்துகொண்டு தன் செயலாற்ற நிடசங்கற்பத்துடன் நடவடிக்கையில் இறங்குகிறான் சங்கிலி.

(தொடரும்)

நஷ்டஈடு கோருகிறார்

(புலோலி)

வல்வெட்டித்துறையில் அண்மையில் துப்பாக்கிச் சூட்டினால் இறக்கும் மரணமான சோமசுந்தரம் அமிர்தலிங்கம் என்ற இளைஞனின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென வடமிராட்சி ஐக்கியதேசியக்கட்சி பிரதம அமைப்பாளர் திரு. சே. கணேசலிங்கம் அரசாங்க [illegible]

யாழ். பல்கலைக்கழகத்திற்கு

நல்லபெயர் ஏற்படமாணவர் பண்பாட்டுடன் விளங்கவேண்டும்

உபவேந்தர் விடுத்துள்ள அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்பொழுது சிறு பரபரப்பிலிருக்கிறது. இதன் வளர்ச்சியைப் பலரும் பல கோணங்களில் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். எனவே மாணவர்கள் பண்புடன் நடந்தால்தான் எமது பல்கலைக்கழகத்துக்கு நல்ல பெயர் ஏற்படும். பொதுமக்களின் மதிப்புக் அரசின் ஆதரவு கிட்டும். என்று யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்களைப்பழைய மாணவர்கள் துன்புறுத்தியது தொடர்பாக இவர் தடை செய்யப்பட்டு இப்பொழுது மன்னிப்பு அளிக்கப்பட்டிருப்பது தொடர்பாக இவர் பத்திரிகைகளுக்கு விடுத்த மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கொழும்பில் 16-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சபைக் கூட்டம் நடைபெற்றது. புதிய மாணவர்களைத் துன்புறுத்தியதற்காக விரிவுரைகளிலிருந்து தடைசெய்யப்பட்ட [illegible] படி, சம்பந்தப்பட்ட ஏழு(7) மாணவர்கள் விடுத்த வேண்டுகோள் அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. ஆறு (6) மாணவர்கள் தாம்செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதோடு புதிய மாணவர் மனம் நோகும்படி நடந்ததைக்கு மன்னிப்புக் கேட்டிருந்தனர். அத்தகைய தவறுகள் செய்த தவறுணர்ந்த கருணையுடன் ஆராய்ந்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டிருந்தனர்.

இம் மாணவர்கள் சார்பில் மூதாணவர் சிலர் துணைவேந்தருக்கு எழுதிய கடிதமும் ஆளுநர் சபையில் வைத்திருந்தும் கொண்டுவரப்பட்டது. வருகைதரத்திற் இந்தமாய சம்பவங்கள் நடைபெறுமாக தடுப்போம் என இக்கடிதத்திற் வாக்குறுதி அளித்திருந்தனர். மேலும் சென்ற மாதத் இவர்கள் ஆளுநர் சபைக்கூட்டம் நடைபெற்றபொழுது இடம்பெற்ற நிகழ்ச்சிகளுக்குத் தாம் வருந்துவதாகவும் இக்கடிதத்திற் குறிப்பிட்டிருந்தனர்.

பல்கலைக் கழக ஆத்தோலிக்க மாணவர் ஒன்றியமும் புதிய மாணவர் நுழைவின்போது மனித மதிப்பிற்கு முரணாக நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டித்ததோடு, மனித உரிமைகளுக்காகத் தங்கள் [illegible] மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டிருந்து. மாணவரைத் துன்புறுத்துதல் எந்த விதத்திலும் அனுமதிக்கப்படாமட்டாது எனினும் துன்புறுத்தல் குற்றத்துக்கு உள்ளானவர்களுக்குத் தகுந்த ஆளுநர் தண்டனை [illegible] வந்துறுத்தியது. ஆயினும் இம்மாணவர்கள் தாம் செய்த குற்றங்களை ஒப்புக் கொண்டதாலும் அதற்கு, மனவருத்தம் தெரிவித்தமை யாலும், கருணை காரணமாக மேற் பிள்வகுமாறு தீர்மானித்தனர்.

வழக்கப்படி தண்டனையை ஒரு வருடத்திற்குஒத்திவைத்த தண்டனையாக மாற்றுவது.

மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லவும் ஏனைய உரிமைகளைப் பெறவும் அனுமதித்தல்.

மாணவர்கள் துணைவேந்தரை உடனடியாக நேரிற் கண்டு அனுமதிபெற்று விரிவுரைகளுக்கு செல்லுதல்.

புதிய மாணவர்களைப் பழைய மாணவர்கள் எந்த விதத்திலும் துன்புறுத்துவதை பல்கலைக்கழகம் அனுமதிக்க மாட்டாது. இத்தகைய துன்புறுத்தல் பொதுமக்களின் வெறுப்பையும் தேடிக்கொள்கின்றது; எங்களுடைய பல்பாட்டிற்கு முரணான இப்பழக்கம் ஒழிக்கப்படவேண்டும். புதிதாகப் பல்கலைக்கழகத்திற் புகும் மாணவர்கள் தாம் பழகவேபடாத புதிய சூழலுக்கு வருகின்றபோது அவர்களின் உள்ளம் வருந்தும் அளவிற்கு [illegible] பழைய மாணவர் துன்புறுத்தும்போது அவர்களுக்கு அச்சமும் மனக் குழப்பமும் உண்டாகின்றன.

துன்புறுத்தல் செயல்கள் [illegible] முடியாது. ஒவ்வொரு மாணவரின் மன நிலையும் ஒரே மாதிரியாக அமையாது. மேலும் தனிப்பட்ட முறையிலோ, இவர் ஒன்றுகூடி சேர்ந்தோ கேலிகளைக் கேட்கின்றபோதும் புதிய மாணவர் சஞ்சலமடைகின்றனர். அறிமுகம் என்ற சாட்டிற் புதிய மாணவரைப் பலவித கேலிகள் கேட்கின்றபோதும் இவர் அதற்கு அஞ்சக்கூடும். எனவே மாணவர்களுடைய உள்ளக் நோக்கு எந்தவிதத்திலாவது அவர்களை துன்புறுத்தவது அனுமதிக்கப்படமாட்டாது.

மாணவர்களைத் துன்புறுத்துவதற்காகத் தண்டிக்கப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்ல முடியாது வீட்டிற்குத் திரும்பிப் போகும் போது வீட்டிற் குழப்பம் ஏற்படுகின்றது. பெற்றோர் மனமுடைகின்றவராய், குடும்பத்தில் பேருக்கு இழுக்கு ஏற்படுகின்றது. எனவே இத்தகைய தீய வழியில் செல்லாதிருப்பது பலனைத் தருவதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்பொழுது சிறு பரபரப்பில் இருக்கின்றது. இதன் வளர்ச்சியைப் பலரும் பல கோணங்களில் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். எனவே பண்பாட்டுடன் நடந்தால்தான் எமது பல்கலைக்கழகத்திற்கு நல்ல பெயர் ஏற்படும். பொதுமக்களின் மதிப்பும், ஆதரவும் கிடைக்கும். எனவே வருங்காலத்திற் பழைய மாணவர் [illegible] புதிய மாணவர்களை நல்ல முறையில் வரவேற்று, அவர்களின் பல்கலைக்கழக தொடக்க வாழ்க்கையை [illegible] செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

வெட்டுக்காயங்களுடன் வீதியில் கிடந்த சடலம்!

(புலோலி-உடுப்பிட்டி)

புலோலி இலக்கணாவத்தையைச் சேர்ந்த சீவல்தொழிலாளி ஒருவர் பலத்த வெட்டுக்காயங்களுடன் வராந்தப் பின் ரோட்டில் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவிலேயே 53 வயதான நாதன் வல்லிபுரம் என்ற இச் சீவல் தொழிலாளியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இரவு 7 மணியளவில் பருத்தித்துறையிலிருந்து ஆனைவளையை நோக்கிச் சென்ற பஸ்ஸில் சாரதி வீரத்தி வழியில் இச்சடலத்தைக் கண்ணுற்றதும் பஸ்ஸைத் திருப்பி பருத்தித்துறைப் பொலிசுக்குச் சென்று புகார் செய்தார். இதைஅறிந்த பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

இச்சடலம் கிடந்த இடத்தில் பரந்த வெளியாகவும் வீதியின் இரு மருங்கிலும் பற்றைகளுக் காணப்பட்டன.

பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் நேற்றுக் காலை விதல விசாரணை நடத்தினார். இறந்தவரின் மனைவி உட்பட சிலர் சாட்சியமளித்தபின்னர் தீர்ப்பு வழங்குவதை நீதிபதி இம் மாதம் 21-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

நேற்று முன்தினம் இறந்தவர் பாவித்ததாகக் கருதப்படும் வாளின் உட்பட மற்றும் சில பொருட்களை விதலத்திற்கு அண்மையிற் கண்டெடுத்தனர்.

இறந்தவர் சம்பவ தினத்தன்று காலை 4 மணியளவிற் [illegible]க்குப் புறப்பட்டபோது அவருடன் அவரது வீட்டிலிருந்தவர்கள் வாக்குவாதப்பட்டதாகக் கூறப்படும் மூவரைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு சந்திரபு குணரத்ன தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

வாக்குவாதத்துறை உதவிப் பொலிஸ் அதிபர் சிறு இரு பாக நேற்று விதலத்திற்குச் சென்று பார்வையிட்டார். [இ]

"நித்திரையிலாவது கொல்லாமல் விடமாட்டோம் என்றனர்"

இறந்தவரின் மனைவி சாட்சியம்

[புலோலி-உடுப்பிட்டி]

சம்பவதினம் மாலை 4 மணியளவில் எனது கணவர் சிவலுக்குப் புறப்பட்டபோது வீட்டுக்கு வந்த மூவருக்கும் எனது கணவருக்குமிடையே பலத்த வாக்குவாதம் நடந்தது. இவர்கள் மூவரும் எனது கணவரிடம் 'நித்திரையிலாவது உன்னைக் கொலை செய்யாமல் விடமாட்டோம்' என அடிக்கடி கூறிவந்துள்ளனர். எனவே இக் மூவருக்கும் தெரியாமல் இச்சம்பவம் நடைபெற்றிருக்கமுடியாது.

மீன்பிடி ஆராய்ச்சி சபை சுதந்திரமாக இயங்கும்?

(சொழுப்பு)

மீன்பிடி ஆராய்ச்சி சபையைச் சுதந்திரமாக இயங்குவதற்கான அதிகாரங்கள் மீன்பிடி அமைச்சிலும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி சபை மீன்பிடி சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கு பொறுப்பாக விருப்பதுடன், மீன்பிடி சம்பந்தமாகப் புதிய தொழில்நுட்பமுறைகள், மீன்பிடிப்பகுதியில் ஆராய்ச்சிகள் பற்றியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இச் சபையை அமைப்பது பற்றிய கலந்துரையாடல் மீன்பிடி அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவின் தலைமையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் பேராசிரியர் கொல்ரா, பேராசிரியர் அகுட்பிரசாத் மற்றும் பல அதிகாரிகளும் பங்குபற்றினர்.

தற்போது மீன்பிடி ஆராய்ச்சிப் பகுதியினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளினால் மட்டும் அதிகரித்துள்ள தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதெனவும், பரந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குப் புறம்பானதொரு ஆராய்ச்சிசபை ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனவும் இக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதுசம்பந்தமாகப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களினதும், விஞ்ஞானிகளினதும் ஒத்துழைப்பு வழங்கப் [illegible]மெனவும் தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடி ஆராய்ச்சி சபை சுதந்திரமான அமைப்பாக இயங்குவதுடன் மீன்பிடி உற்பத்தியோடுத்தர் சம்பந்த மான பிரச்சினைகளையும் அவர்களின் எதிர்ச்சிகளைப் போக்குவதையும்பற்றி நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

கலந்துரையாடலுக்குத் தொடர்ந்து பேராசிரியர் அகுட்பிரசாத்தையும், திரு ஜெயவர்த்தனாவையும் உள்ளடக்கிய ஐந்து பேர்கொண்டகுழு இச் சபையினை நடாத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டது. [வெ]

இன்று பரிசளிப்பு விழாவும் காட்சிப்போட்டியும்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை வரவேட்பு உதைபந்தாட்டச் சங்கப் பரிசளிப்பு விழாவும், காட்சிப் போட்டியும் இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமைதானத்தில் நடைபெறும்.

காட்சிப் போட்டியில் வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை வரவேட்பு தலைவர் கோஷ்டியும் பங்குபற்றவுள்ளன. [வெ]

பிரயாணிகள் சங்கம் நன்றி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு டிப்போவுக்கு நாளை புதிய பஸ்வண்டிகள் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இப்பஸ்வண்டிகளை அனுப்பி வைக்கக்கூடிய வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் பிரதேச [illegible] [தெற்று] ஆகியோருக்கும் தமது நன்றியை பிரயாணிகள் சார்பில் முல்லைத்தீவு பாராளுமன்ற பிரயாணிகள் சங்கத்தலைவர் திரு க. கனகசபை தெரிவித்துள்ளார்.

புதிய பஸ் வண்டிகளின் வருகையினால் இப் பாராளுமன்றத்தில் பஸ் சேவை சீரடையுமென பிரயாணிகள் சங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிறந்த பஸ்சேவையை முல்லைத்தீவுப்பகுதி மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அதன் டிப்போ அத்தியட்சகர் திரு விஜயரத்தினம் மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கல், புத்தளம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் தங்கள் புகலிடம் தேடி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வடமேற்கிய மாகாணத்தில் தென்மேற்கில் மாவும் நீரில் மூழ்கியிருக்கின்றன.

முதலில்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அவரர் இராசமாணிக்கம் தான், அவரைத் தொடர்ந்த நீதியமைச்சரும் நானும் நானும் எடுத்த முயற்சியினால் சுவாமி விபுலானந்தருக்கு முத்திரை வெளியிடப் படுகின்றது.

இந்தமாய பிரதமர் அமைச்சர் திரு. செ இராஜதுரை முத்திரை வெளியீடு பற்றி நேற்றிரவு வானொலியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். [வெ]

இப்பத்திரிகை "எழுநாடு" லிமிட்டெட் [illegible] 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. GB/3948/78 The Eelanadu P B 49 Telegram Eelanad
Phone: 589.